1993 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 202, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

202—

மருந்துகள் உபயோகிக்கும் நாள் முடிந்து விற்கப்படுவதைத் தடுத்தல்.

*10824— திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்துகள் உபயோகிக்கும் தேதி முடிந்த பிறகும் மக்களுக்கு விற்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) இதைத் தடுப்பதற்கு மருந்து ஆய்வாளர்கள் இம் மருந்துகளைக் கைப்பற்ற வழிவகை செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மருந்துகள் உபயோகிக்கும் தேதி முடிந்த பிறகும் மக்களுக்கு விற்பனை செய்வது சட்டப்படி தண்டனைக்குரிய தாகும். இது பற்றி மருந்து ஆய்வாளர்கள் மருந்துக் கடைகளில் ஆய்வு நடத்தி வருகிறார்கள்.

(ஆ) இதைத் தடுப்பதற்கும், ஆய்வு நடத்தவும் மருந்து ஆய்வாளர்கள் இம்மருந்துகளைக் கைப்பற்றவும் அரசு மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டம் 1940-ன்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. மற்றும் இத்தவறுகள் நடக்காதவண்ணம், அடிக்கடி மருந்துக் கடைகளில் ஆய்வு செய்யப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் உபயோகிப்பதற்கான தேதி முடிந்ததற்குப் பின்னால் மருந்துகளை விற்பனை செய்வதால் அதை உபயோகிப்பவர்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களை அரசு அறியுமா ? அவ்வாறு வழங்கப்பட்டதற்கு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? அதுமாதிரி மருந்துகளை வழங்கியவர்கள் மீது இன்றைய தினத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இதையெல்லாம் தெரிந்திருக்கிற காரணத்தினால்தான் அதற்காக ஆய்வாளர்களை வைத்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுவரை எனக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியல்படி 17 பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கடுமையான நடவடிக்கையை நாங்கள் தொடர்ந்து எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஓராண்டுக்கு, குறைந்தபட்சம் 4,000 பரிசோதனைகளைச் செய்ய வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அது குறைந்தபட்சம்தான். அதற்கு மேலும் அவர்கள் செய்ய வேண்டும். குறைந்தபட்சம் 150 பேர்கள் மீது வழக்கு தொடர வேண்டும் என்ற ஒரு நிர்ணயம் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஏறத்தாழ 72 பேர்கள் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் தற்போது அதிலே 52 பேர்கள் மட்டும்தான் இருக்கின்றார்கள். மற்ற இடங்கள் காலியாக இருக்கின்றன. நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினாலே அதை நாம் நிரப்ப முடியவில்லை. இருந்தாலும் இந்த 52 பேர்களை வைத்துக் கொண்டு எல்லா இடங்களிலும் ஆய்வு செய்து கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முழுமையாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆனாலும், அரசாங்கம் மருத்துவமனைகளில் (Drug Store) இலிருந்து அந்த அந்த வார்டுகளுக்கு எடுத்துச் செல்லுகின்ற போது (Bulk P. cket) இல் உள்ள 'B-Complex, STDT' போன்ற மருந்துகளை அந்த பாக்கெட்டுகளிலிருந்து வேறு பாக்கெட்டிற்கு மாற்றி விடுகிறார்கள். அப்படி மாற்றிவிடுகின்றபோது எக்ஸ்பயரி தேதியை நாம் அறிந்து கொள்ள முடிவது இல்லை. அதை மாற்றுவதற்கான வாய்ப்பும் இல்லாமல் போய்விடுகின்றது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனகளிலே இப்படி மாற்றிவிடுகிறார்கள் என்ற தகவல் எனக்கு இதுவரை வரவில்லை. ஆனால் இப்படி மாற்றிக் கொடுக்கக் கூடாது என்று உத்தரவிருக்கிறது. அங்குள்ளவர்களுக்கும் அது தெரியும்.

1993 ஏப்ரல் 1]

அவ்வாறு மாற்றிக் கொடுப்பதினால் என்ன பிரச்சினை ஏற்படும் என்பதை அந்தத் துறையிலே இருப்பவர்கள் நிச்சயமாக அறிவார்கள். அப்படி எங்காவது நடக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு டாக்டர். அவர்களுக்குத் தகவல் கிடைத்தால் உடனடியாக எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எக்ஸ்பயரி டேட் என்று இருக்கும்போது அது முடிந்த பிறகு அந்த மருந்துகளைத் தருவதற்குப் பதிலாக அந்தத் தேதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பாக அதிகம் உள்ள மருந்துகளை மாவட்ட அளவிலோ அல்லது மாநில அளவிலோ மருந்துகளைச் சேகரித்து தேவைப்படும் இடங்களில் அவைகளை விநியோகிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு வகையிலே இருக்கிறது. ஒன்று தனியார், இன்னொன்று அரசு சார்பாக, தனியார் அவர்களே பொறுப்பு எடுத்துக் கொள்கிறார்கள், எக்ஸ்பயரி டேட் ஆவதற்கு முன்னாலே அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு மருந்துகளை எடுத்துக் கொள்கிறார்கள். இங்கே இருக்கிற கேள்வி எக்ஸ்பயரி டேட் ஆனதற்குப் பிறகும் அதை விற்பதற்கு எடுக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்பது தான். எனவே, தனியாருக்கு தனியாக ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சென்று அதைத் தடுக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே நமக்கு இருக்கிற முறை, போதிய அளவிற்கு வசதி இல்லாத காரணத்தினால், ஒரு சில அதிகாரிகளிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறோம். அவர்களிடத்திலே பல்வேறு முக்கியமான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு, இது ஒரு சின்ன பொறுப்பாக அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் முழு கவனத்தை செலுத்த முடியாமல் இருந்தது. இப்பொழுது அந்த நிலைமை மாற்றப்பட்டு அதற்காக ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் ஏற்பாட்டை செய்திருக்கிறோம். இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கு என்று தனியாக ஒரு நிறுவனம் அமைக்கப்பட இருக்கிறது.

ஒவ்வொரு மருத்துவமனையாக மாதந்தோறும் செல்ல வேண்டுமென்ற ஏற்பாட்டை நாங்கள் வைத்திருக்கிறோம். அப்படி செல்கிறபோது எங்கெங்கே எக்ஸ்பயரி-ஆன மருந்துகள் இருக்கிறதோ, அந்தத் தேதி முடிவதற்கு முன்னாலே அதை எடுத்துவந்து வேறு இடத்திற்கு பயன்படுத்த முடியுமா அல்லது திருப்பிக் கொடுத்துவிடலாமா என்று அந்தக் கார்ப்பரேஷன் மூலமாக அந்த பிராஞ்ச்-இன் மூலமாக நடவடிக்கை எடுப்பார்கள். எனவே இந்த அமைப்பு வந்த பின்னாலே இது சீராக நடக்கும். மருந்துகள் வீணாவது தடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எக்ஸ்பயரி ஆன மருந்துகளை விற்பனை செய்யக்கூடிய, உற்பத்தி செய்யக்கூடிய, அந்தக் கம்பெனிகளை தடுத்து நிறுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பெனி அதை உற்பத்தி செய்வதில்லை. உற்பத்தி செய்கிறபோது சரியான நேரத்திலே கொடுக்கிறார்கள். கடைக்குப் போன பின்னாலே, விற்காமல் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால், ஓராண்டுக்குள்ளோ, இரண்டு ஆண்டுக்குள்ளோ அதற்கு காலம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலேதான் அதை விற்கக்கூடாது. எனவே, உற்பத்தி செய்கிற கம்பெனிக்கு இதிலே பிரச்சினை இல்லை. அதை மூடினால் நீங்களும் வருத்தப்படுவீர்கள். நிறைய பேர் அதிலே பணியாற்றி கொண்டிருப்பார்கள். அந்த விற்கிற இடத்திலே இந்தப் பிரச்சினை வருகிறது. விற்கிற கடைகள் அப்படி தவறாக காலம் தாழ்த்தி, அதில் குறிப்பிட்ட அந்தத் தேதிக்குப் பின்னாலே அதை விற்றால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத் தான் அரசாங்கம் பணத்தை செலவு செய்து, சம்பளம் கொடுத்து அதற்காக அதிகாரிகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் போய் நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்தப் பட்டியலை, எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கனவே சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 203, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.